# <u>குளித்தலை நகராட்சி</u>

14.09.2020.ஆம் தேதி திங்கள் கிழமை பிற்பகல் 12.15 மணிக்கு
நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சிப் பகுதியில் மின்கல இயங்கு வாகனம் (BOV) Charge செய்வதற்கும், மழையில் நனையாமல் நிப்பாட்டும் வசதி செய்தல் பணிக்கு ரூ.3,50,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.49, நாள்–31.08.2020இல் அனுமதி பெற்று 02.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி அலுவலக பின்புறம் மற்றும் நகர்மன்ற கூடம் பின்புறம் GI Roof Shed அமைத்தல் | 1).திரு.எம்.செந்தில்குமார், 63,பெரியார்நகர், குளித்தலை. | 0.13% குறைவு |
| | | 2).திரு.ஆர்.என்.வெங்கடாஜலபதி, 2/20,சௌண்டீஸ்வரி அம்மன்கோவில்தெரு, குளித்தலை. | 0.69% அதிகம் |

அலுவலக குறிப்பு– 1).மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.13% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எம்.செந்தில்குமார், ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2).அவசர அவசியம் கருதி பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.1102/2020/இ1)

பொருள்– 02. குளித்தலை நகராட்சியில் ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களுக்கு அலுவலக அறை அமைக்கும் பணிக்கு ரூ.9,20,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.50, நாள்–31.08.2020இல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று 02.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களுக்கு தற்காலிக GI Roof Shed அமைத்தல் | 1).திரு.எம்.செந்தில்குமார், 63,பெரியார்நகர், குளித்தலை. | 0.07% குறைவு |
| | | 2).திரு.ஆர்.என்.வெங்கடாஜலபதி, 2/20,சௌண்டீஸ்வரி அம்மன்கோவில்தெரு, குளித்தலை. | 0.57% அதிகம் |

அலுவலக குறிப்பு– 1).மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.07% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எம்.செந்தில்குமார், ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2).அவசர அவசியம் கருதி பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.1091/2020/இ1)

..2..

பொருள்– 03. இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்கள் 04.09.2020.ஆம்தேதிய குறிப்பில், இந்நகராட்சிமூலம் அரசு நிதி ஒதுக்கீட்டின்படி வாங்கப்பெற்ற மின்கலங்கள் (BOV) பழுதடைந்து பயன்படுத்த இயலாதநிலையில் உள்ளதாக தெரிவித்ததின் அடிப்படையில், குறிப்பிட்ட ஒரு வண்டிக்கு (1) உரிய மின்கலம் புதிதாக வாங்கி கொடுப்பதற்கு ஏற்கனவே பழுது நீக்கம் செய்யப்பட்ட Priyam இண்டஸ்ட்ரீஸ் மற்றும் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு, பழைய பேட்டரியை பெற்றுக்கொண்டு பழைய பேட்டரியின் விலையை புதிய பேட்டரியின் விலையில் குறைத்து வழங்கவும், மேற்படி செலவினத் தொகை ரூ.76000/–க்கு பணியினை மேற்கொள்ளவும், மேற்கண்ட செலவினத் தொகைக்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை 2020–2021ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின்கீழ் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1103/2020/இ1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சியில் குடிநீர் விநியோகம் மற்றும் இதரப்பணிகள் செய்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் 6 (ஆறு) நபர்கள் பெறப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரப்பெற்ற நிலையில் 01.08.2019 முதல் ஒரு வருடத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு பணி செய்த வருகிறார்கள். இவர்களுக்கு 31.07.2020.ல் அனுமதி முடிவடைந்து விட்டது. ஒப்பந்ததாரர் ஏற்கனவே கடந்த ஆண்டு விலைக்கு மீண்டும் ஒரு வருடத்திற்கு நீட்டிப்பு செய்துகொடுக்க கோரியதின் அடிப்படையில், பொறியர்பிரிவில் அன்றாட பணி பாதிப்பு ஏற்படாதவண்ணம் 01.08.2020 முதல் 31.07.2021 முடிய நீட்டிப்பு செய்துகொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.10,00,000/–க்கு (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). மேற்கண்ட செவினத்தை 2020–2021ஆம்ஆண்டு குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1066/2019/இ1)

பொருள்– 05. இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் தினந்தோறும் உருவாகும் குப்பைகளை தரம் பிரித்து வாங்கி அதனை உரமாக மாற்றம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்து அரசு நிதி ஒதுக்கீடுசெய்து இரண்டு கட்டுமானங்கள் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன்படி (1).பெரியார்நகர் ஜெய்மஹால் அவென்யூ பூங்காவிலும், (2).அண்ணாநகர் பூங்கா இவைகளில், பெரியார்நகர் ஜெய்மஹால் அவென்யூ என்ற இடத்தில் கட்டுமானம் முடிக்கப்பட்டு நல்லமுறையில் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மற்றொன்று அமைய உள்ள இடத்திற்கு, திரு.பாண்டியன் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.WP(MD) No.463/2019 & WP(MD)No.411/2019–ல் தொடர்ந்து, 21.01.2019ஆம் தேதியன்று தடையாணை பிறப்பிக்கப்பட்டதில், ஆணையர் மாற்று இடம் தேர்வு செய்துகொள்ள தெரிவித்துள்ளார்கள். இதன்படி, 28.06.2019ஆம் தேதியில் நகர்மன்ற தீர்மான எண்.112இல், சத்தியமங்கலத்தில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கில் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடம் சுமார் (12+12) மொத்தம் 24–கி.மீ. தூரம் தினந்தோறும் குப்பைகளை கொண்டுசெல்ல வேண்டும். அதற்கு தனியாக பெரிய லாரி ஒன்று தேவைப்படும். இதன்பொருட்டு நிர்வாக செலவினம் இருமடங்கு மேற்கொள்ள வேண்டிய நிலை நகராட்சிக்கு ஏற்படுவதை தவிர்க்கும்பொருட்டு, தற்போது பெரியார்நகர் பகுதியில் உள்ள பூங்காவிற்கான இடத்தினை ஆணையர், பொறியாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகியோர் நேரடியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், மேற்படி பெரியார்நகர் பகுதியில் உள்ள பூங்காவிற்கு ஒதுக்கீடு தற்போது எவ்வித அபிவிருத்தியுமின்றி உள்ளது. மேற்படி இடத்தில் நுண்உரக்கலவை தயாரிக்கும் மையம் ஏற்படுத்தும்பட்சம், பொதுமக்களுக்கு எவ்விதத்திலுரும் பாதிப்பு ஏற்படாது என்பதால் மேற்படி இடத்தில் கட்டுமான பணி மேற்கொள்ள பூங்கா இடம் தேர்வு செய்யப்பட்டது. இவ்விடத்தில் கட்டுமான பணி மேற்கொள்ள உரிய ஆணை பிறப்பிக்க, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் வழியாக கருத்துரு அனுப்பி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் அனுமதிபெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.95/2019/இ1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சிப் பகுதியில் வழங்கப்படும் குடிநீரில் குளோரின் கலந்த குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.7,60,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மான எண்.51, நாள்–31.08.2020இல் அனுமதி பெற்று 09.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சிப் பகுதியில் வழங்கப்படும் குடிநீரில் குளோரின் கலந்து விநியோகம் செய்வதற்கு | 1). M/s.M.R.DYESON Chemical, 25,K.V.Nagar, Erode. | **9.69%** மதிப்பீட்டைவிட மிகக் குறைவு |
| | | 2). M/s.Shri Balaji Company, Salem. | **5.00%** மதிப்பீட்டைவிட குறைவு |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 9.69% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.M.R.DYESON Chemical ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2).அவசர அவசியம் கருதி பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1098/2020/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி ஜெய்மஹால் அவென்யூ பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் நுண்உரக்கிடங்கில் கூடுதல் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவர தேவையான மின்சாதனங்கள் மற்றும் இதர பணிகள் மேற்கொண்டு, கட்டுமானத்தை பயன்படுத்த முடியும் என்ற நிலையில், பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.2,00,000/–க்கு (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.

2). மேற்கண்ட செலவினத்தை 2020–2021ஆம் ஆண்டு வருவாய் மற்றும் மூலதன நிதியில் செலவுசெய்ய அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1164/2020/இ1)

*******

# குளித்தலை நகராட்சி

14.09.2020.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 59 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 2 | 2 | 60 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 3 | 3 | 61 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 62 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 63 | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 64 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 7 | 7 | 65 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/—ம.முத்துக்குமார்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.